# வடக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் பதவி வெற்றிடத்தினை நிரப்புவதற்கான மீள் விண்ணப்பம் கோரல் - 2023

வடக்கு மாகாண கௌரவ ஆளுநரின் 2023.09.08 ம் திகதிய அனுமதிக்கமைய வடக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள வடக்கு மாகாண இறைவரி ஆணையாளர் பதவிக்கு (வெற்றிட எண்ணிக்கை 01) தற்போது சேவையிலுள்ள (விண்ணப்ப முடிவுத் திகதியில் அரச சேவையிலிருந்து ஓய்வு பெறாதவர்) இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையில் தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்தும், மாகாண இறைவரி சேவையைச் சேர்ந்த தகுதிவாய்ந்தவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2018.01.01ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட மாகாண இறைவரி சேவையின் நிறைவேற்றுதர பதவிக்குரிய சேவைப்பிரமாணக் குறிப்பில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் 2018.01.01 ம் திகதியில் இருந்து செயல்வலுவிலுள்ள சேவைப்பிரமாணக்குறிப்பு, அச்சேவைப் பிரமாணக் குறிப்பில் ஏற்படுத்தப்பட்ட திருத்தங்கள், தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், நிதிப்பிரமாணங்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1817/30ஆம் இலக்க 2013.07.03ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை ஆகியவற்றிற்கும் உட்பட்டு, இப் பதவிக்கான வெற்றிடம் நிரப்பப்படும்.

மேலும் 2023.05.05ம் திகதிய பத்திரிகை அறிவித்தல் மூலம் கோரப்பட்ட மேற்படி பதவி வெற்றிடத்திற்கு விண்ணப்பித்தோர் தற்போது கோரப்படும் தகைமைகளை கொண்டிருப்பின் மீள விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி **2023.10.10** ஆகும்.

**02. ஆட்சேர்ப்புக்கான சேவை நிபந்தனைகள் :-**

2.1. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். வடக்கு மாகாண இறைவரி சேவையில் இப்பதவியின் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட சேவைப்பிரமாணக் குறிப்பு விதிகளுக்கு அமைவான சேவை நிபந்தனைகள் ஏற்புடையதாகும்.

2.2 இந்நியமனம் பெறுபவர் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும்.

2.3 அலுவலர் மாகாண இறைவரிசேவையில் அல்லது இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையில் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டு இருத்தல் வேண்டும்.

2.4 மேலே குறிப்பிடப்பட்ட பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் தங்களது விண்ணப்பப் படிவங்களை தமது திணைக்களத் தலைவருடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

**03. சம்பள அளவுத்திட்டம் :-**

2016/02/25 ம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 03/2016ற்கு அமைவாக. **SL 1 – 2016** என்ற சம்பள வகுப்பின் **ரூபா. 47,615 – 10 x 1,335 – 8 x 1,630 – 17 x 2,170 – ரூபா. 110,895/-** ஆகும்.

04. **தகைமைகள்** :-

4.1 தற்போது சேவையில் உள்ளவர்களுக்கான ஆட்சேர்ப்பாக உள்ள நிலையில் உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

4.2 இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையில் சிரேஷ்ட பிரதி ஆணையாளர் பதவியில் ஐந்து (5) வருடங்களினை பூர்த்தி செய்தவர்கள் அல்லது இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையில் சிரேஷ்ட பிரதி ஆணையாளர் பதவிக்கு மேற்பட்ட வகுப்பினை அல்லது தரத்தினை கொண்ட இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையை சேர்ந்தவராக இருத்தல்

**அல்லது**

மாகாண இறைவரிசேவையைச் சேர்ந்த பிரதிஆணையாளர் பதவியில் ஐந்து (5) வருடங்களினை பூர்த்தி செய்தவர்கள் அல்லது மாகாண இறைவரிசேவையைச் சேர்ந்த பிரதிஆணையாளர் பதவிக்கு மேற்பட்ட வகுப்பினை அல்லது தரத்தினை கொண்ட மாகாண இறைவரிச் சேவையை சேர்ந்தவராக இருத்தல்

4.3. குறிப்பிட்ட தரத்தில் **2023.05.22** ஆந் திகதியில் தாபன விதிக்கோவை , பொதுச்சேவை ஆணைக்குழுவின் ஏற்பாடுகள் என்பவற்றிற்கமைய விண்ணப்பதாரி கிடைக்கவேண்டிய சகல சம்பள ஏற்றங்களையும் பெற்றுள்ளதுடன், எவ்விதத்திலான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகாதவராகவும் இருத்தல் வேண்டும்.

4.4.வடக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய எந்தவொரு மாகாணத்திலுள்ள மாகாண இறைவரிசேவையைச் சேர்ந்தவர்கள் அல்லது இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையில் உள்ளவர்கள் தெரிவு செய்யப்படுமிடத்து வடக்கு மாகாண சபையின் தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவைக்கமைவாக உரிய விடுவிப்பினை பெற்றுக்கொள்ளவேண்டும்.

05. **பொதுவான தகைமை :-**

விண்ணப்பதாரிகள் விளம்பரம் கோரும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**06. ஆட்சேர்ப்பு முறை :-**

அறிவித்தலில் உள்ளவாறு தகைமைகளைக் கொண்ட இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையைச் சேர்ந்த, மாகாண இறைவரிசேவையைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளுள் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப்பரீட்சை சபையினால் நடத்தப்படும் கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்பட்ட உயர் புள்ளி ஒழுங்கின் அடிப்படையில் தகைமை பெறும் விண்ணப்பதாரி இப்பதவிக்கு நியமிக்கப்படுவார்.

6.1. வடக்கு மாகாணத்தில் மாகாண இறைவரி ஆணையாளர் பதவிக்கு அனுமதிக்கப்பட்டு செயல்வலுவிலுள்ள சேவைப்பிரமாணக்குறிப்பு, அதன் திருத்தங்கள், அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகள், தாபன விதிக்கோவை, வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை, மாகாணக் கொள்கைகள் மற்றும் விளம்பரத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஆட்சேர்ப்பு செய்யப்படும். அத்துடன் விண்ணப்பதாரிகள் கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் பரீசிலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையென தெரியவருமிடத்து பரீட்சார்த்தியுரிமை இரத்துச் செய்யப்படும்.

6.2. அனைத்து விண்ணப்பதாரிகளும் **2023.05.22** திகதிக்கு முன்னதாக பதவிக்கு ஏற்புடைய அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும், என்பதுடன் தரவுகள் முழுமையற்ற மற்றும் தகைமையற்றவர்களின் விண்ணப்பங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

6.3. வடக்கு மாகாண இறைவரி ஆணையாளர் பதவிக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கையில் 2023.05.22ம் திகதியில் உள்ளவாறான வெற்றிடத்திற்கு (01) நியமிக்கப்படுவர்.

6.4 தமது தகைமைகளை சான்றுறுதிப்படுத்துகின்ற சகல ஆவணங்களையும் நேர்முகத்தேர்வு இடம்பெறும் தினத்திலேயே சமர்ப்பித்தல் வேண்டும். நேர்முகத்தேர்வின் போது சமர்ப்பிக்கப்படாத ஆவணங்கள் தொடர்பில் பின்னர் எக்காரணம் கொண்டும் கவனம் செலுத்தப்படமாட்டாது.

07. **பொய்யான தகவல்களுக்கான தண்டனை :-**

விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்யும் போது மிக கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். (இக்கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சை விதிகளின்படி,) எவரேனும் விண்ணப்பதாரியொருவர் கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சைக்கு முன்னரோ, கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையின் போதோ அல்லது கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் என தெரியவருமாயின், அவரின் பரீட்சார்த்தியுரிமை இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரியொருவர் சமர்ப்பிக்கின்ற ஏதேனும் தகவல் பொய்யானதென தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

**08. விண்ணப்பிக்கும் முறை :-**

8.1. இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தினை தமது சொந்தக் கையெழுத்தின் மூலம் பூரணப்படுத்தி தமது திணைக்களத் தலைவரூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

8.2. உரிய விண்ணப்பப்படிவத்துக்கு அமையாதவையும், சரியான முறையில் பூரணப்படுத்தப்படாதவையும், முழுமையுறாதவையுமான விண்ணப்பங்கள் எதுவித அறிவிப்புக்களுமின்றி நிராகரிக்கப்படும். உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யத்தவறுவதால் ஏற்படும் விளைவுகளுக்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகளாவர். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் இந்த அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8.3. விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் **“வடக்கு மாகாண மாகாண இறைவரி ஆணையாளர், பதவி வெற்றிடம் நிரப்புதல் – 2023”** என குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

8.4. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2023.10.10— ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் **“செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.”** எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

09. விண்ணப்பதாரியின் ஆளடையாளத்தை நிரூபிப்பதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை
(ii) செல்லுபடியான இலங்கை கடவுச்சீட்டு.
(iii) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்

**10. கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சை:-**

கட்டமைப்புச்சார் நேர்முகப்பரீட்சையின்போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக குறித்தொதுக்கப்பட்ட புள்ளிகள் வழங்கப்படும்.

**(மொத்தம் 100 புள்ளிகள்)**

| இல | புள்ளிகள் வழங்கப்படும் விடயப் பரப்புக்கள் | உச்ச புள்ளிகள் |
|---|---|---|
| 01. சேவைமூப்பு | | |
| 01.1 | a. மாகாண இறைவரியைச் சேர்ந்த பிரதி ஆணையாளர் பதவியில் திருப்திகரமானதும் முனைப்பானதுமான சேவையை பூர்த்தி செய்த ஐந்து வருடத்தின் பின்னரான திருப்திகரமானதும் முனைப்பானதுமான ஒவ்வொரு முழு ஆண்டிற்கும் தலா 08 புள்ளிகள். ( உச்சபட்சம் 05 ஆண்டுகள்)<br><br>b. இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையைச் சேர்ந்த சிரேஷ்ட பிரதி ஆணையாளர் பதவி அல்லது அதற்கு மேல் உயர் பதவியில் மற்றும் மாகாண இறைவரிசேவையைச் சேர்ந்த பிரதி ஆணையாளர் பதவிக்கு மேற்பட்ட பதவியில் திருப்திகரமானதும் முனைப்பானதுமான சேவையை பூர்த்தி செய்த ஐந்து வருடத்திற்கு பின்னரான திருப்திகரமானதும் முனைப்பானதுமான ஒவ்வொரு முழு ஆண்டிற்கும் 10 புள்ளிகள். ( உச்சபட்சம் 05 ஆண்டுகள்)<br><br>குறிப்பு:<br>(01.1 இன் பந்தி a அல்லது பந்தி b, அல்லது இரண்டும் சேர்ந்ததாக உச்சப் புள்ளிகள் 50 வழங்கப்படும் | 50 |
| 01.2 | மாகாண இறைவரித் திணைக்களத்தில் அல்லது இலங்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதில் ஆணையாளர் பதவி அல்லது அதற்கு மேல் உயர் பதவியில் திருப்திகரமானதும் முனைப்பானதுமான சேவையை வழங்கிய ஒவ்வொரு ஆண்டிற்கும் 2 புள்ளிகள். | 08 |
| 02. தொழில்சார் தகைமை | | |
| 02.1 | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றில் வரிவிதிப்பு முகாமைத்துவம், சட்டம், வணிகநிர்வாகம், பொருளியல், வணிகம், கணக்கியல் அல்லது பொது நிர்வாகம் தொடர்புடைய பாடங்களில் பெற்றுக்கொண்ட பட்டப்பின் பட்டம் ஒரு பட்டப்பின் பட்டத்திற்கு 06 புள்ளிகள். | 12 |

| | | |
|---|---|---|
| 02.2 | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிறுவனம் ஒன்றில் வரிவிதிப்பு முகாமைத்துவம், சட்டப்பொருளியல் அல்லது வணிகம் தொடர்புடைய பாடங்களில் பெற்றுக்கொண்ட பட்டப்பின் டிப்ளோமா 04 புள்ளிகள் (பட்டப்பின் டிப்ளோமா, பட்டப்பின் பட்டம் இரண்டும் ஒரே பாடத்தினை கொண்டிருக்குமிடத்து பட்டப்பின் பட்ட பாடத்திற்கே புள்ளிகள் வழங்கப்படும்) | 08 |
| 02.3 | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிறுவனம் ஒன்றில் ஒருவருடத்திற்கு குறையாத ஆங்கில மொழி தொடர்பான கற்கைநெறியினை பூர்த்தி செய்திருத்தல். | 02 |
| 02.4 | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிறுவனம் ஒன்றில் ஒருவருடத்திற்கு குறையாத கணனி தொடர்பான கற்கைநெறியினை பூர்த்தி செய்திருத்தல். | 02 |
| 03 | **பொதுவானவை** | |
| 03 | இறைவரி தொடர்பான செயற்பாட்டிற்காக தேசிய ரீதியாக பெறப்பட்ட விருதுகள், விசேட செயற்திட்டம், கட்டுரைகள் வெளியீடு அல்லது மாகாண இறைவரி சட்டமும் நடைமுறைகளும் தொடர்பாக வெளியிடப்பட்ட புத்தகங்கள் இச்செயற்பாடுகளில் ஒரு செயற்பாட்டிற்கு 04 புள்ளிகள் | 08 |
| 04 | **நேர்முகப் பரீட்சையின் போதான திறன்கள்** | |
| 04.1 | தலைமைத்துவம் (Leadership) | 05 |
| 04.2 | தொடர்பாடல் திறன் (Communication Skill) | 05 |
| | **மொத்தம்** | **100 புள்ளிகள்** |

11. கவனிக்கவும் :- இவ் விளம்பரத்தில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழிமூல உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் தமிழ் மொழிமூல உரையே மேலோங்குதல் வேண்டும். இவ்விளம்பர அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும் வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும். மேலும், இவ்விடயத்தில் ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் வேண்டுமென எதிர்பார்க்குமிடத்து, வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் 021 - 221 9980 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்

*சி.திருவாகரன்,*
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
2023.09.25

சி.திருவாகரன்
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணை...
வடமாகாணம்